2017 ஜூலை 19] [திரு. இரா. குமரகுரு]

பகுதி II திட்டத்தின்கீழ் கொள்ளிடம் ஆற்றிலிருந்து கூட்டுக் குடிநீர்த் திட்டத்தைக் கொண்டு வருவதற்கு அறிவித்தார்கள். அதற்கு 2014 ஆம் ஆண்டில் அரசாணை கையொப்பமாகியிருக்கிறது. மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள், உடனடியாக நடப்பு நிதியாண்டிலேயே 644 கோடி ரூபாய்க்கான அந்தத் திட்டத்தை நிறைவேற்றித் தருவார்களா என்பதைத் தங்கள் வாயிலாகக் கேட்டு அமர்கிறேன்.

(ஆஅ) திருச்சிராப்பள்ளி, உய்யக்கொண்டான் ஆற்றிலுள்ள ஆகாயத் தாமரைகளை அகற்றுதல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.என். நேரு அவர்கள். (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர்கள் பதிவு செய்கிறேன் என்று சொன்னார்கள். பதிவு செய்யட்டும். (குறுக்கீடு) பதில் சொன்னால் 2 மணி நேரம் ஆகும்.*

***திரு. கே.என். நேரு:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருச்சியின் மையப் பகுதியில் அமைந்துள்ளது உய்யக்கொண்டான் ஆறு. அதனுடைய தலைப்பு பேட்டைவாய்த்தலையில் தொடங்கி திருவெறும்பூர் பகுதியிலுள்ள வாழவந்தான் கோட்டை ஏரியில் முடிவடைகிறது. மொத்தம் 40 அல்லது 44 மைல்கள் நீளம் கொண்ட அந்த வாய்க்கால்மூலம் கிட்டத்தட்ட 32,744 ஏக்கர் பாசனம் நடைபெறுகிறது. திருச்சி மாவட்ட ஆட்சியர் அலுவலகம், பொது மருத்துவமனை, நீதிமன்றம் மற்றுமுள்ள முக்கியமான இடங்கள் அனைத்தும் இந்த வாய்க்காலின் அருகில் அமைந்திருக்கின்றன. கிட்டத்தட்ட 15 கிலோ மீட்டர் நீளத்திற்கு ஆகாயத் தாமரைப் படர்ந்தும், கழிவுநீர் அதில் கலக்கின்ற காரணத்தினாலும் திருச்சியிலே சுகாதாரக் கேடு உருவாகியிருக்கிறது. அந்த ஆகாயத் தாமரைகளை அகற்றுவதற்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய கவனத்தை ஈர்த்து அமர்கிறேன்.*

(ஆஆ) தென் மாவட்ட விவசாயிகளுக்குப் பயிர்க் காப்பீட்டு இழப்பீட்டுத் தொகை வழங்குதல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திருமதி பி. கீதா ஜீவன் அவர்கள்.*

திருமதி பி. கீதா ஜீவன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தூத்துக்குடி உள்ளிட்ட 4 தென் மாவட்டங்களிலுள்ள விவசாயிகளுக்கு நெல் தவிர பிற பயிர்களுக்கான பயிர்க்*